உணவு உற்பத்தித் துறை

* 439 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

உணவு உற்பத்தித் துறையில் 5 ஆண்டுகளுக்கு மேல் பணி புரியும் மேஸ்திரி, தலைமைக்கூலி ஆகியவர்கள் நிரந்தரமாக்கப் பட்டுள்ளனரா ?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

திரு. ஆ. தங்கவேலு : உணவு உற்பத்தித் துறையில் பணி புரிகின்ற மேஸ்திரி, தலைமை கூலி 5 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்திருந்தும் அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. அதனால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் ஏதுவும் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதைப் பரிசிலனை செய்து உடனடியாக அந்தச் சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்கும்படியான வழிவகைகள் செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : உணவு உற்பத்தித் துறையில் வேலை செய்யும் மேஸ்திரி, இதாக் கூலிகள் அவ்வப்பொழுது தற்காலிகமாக வேலை எங்கெங்கு நடைபெறுகிறதோ அங்கு வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். அதனால் அவர்கள் பெர்மனென்டு இல்லை. ஆகவே, இவர்களை பெர்மனென்டு ஆக்குவதற்கு முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Cultivation of potato in plains

* 440 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal for the cultivation of potato in the plains on an experimental basis; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) மதுரை மாவட்டத்தில் பெரியகுளம் பகுதியில் பயிரிட்டுச் சோதனை செய்யப்பட்டது. முதல் சோதனையின் விளைவு ஊக்கமளிப்பதாய் உள்ளது. மற்ற இடங்களிலும் இத்தகைய சோதனை நடத்திப் பார்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன் : எத்தனை ஏக்கர் இதுபோன்ற பயிரிடப் பட்டது ? அதற்கு எங்கிருந்து கிழங்குகள் வரவழைக்கப் பட்டன ?

கனம் திரு. பூ. கக்கன் : எத்தனை ஏக்கர் என்ற தகவல் என்னிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.